**Source:** *Tamil Murasu,* p9
**Date:** 18 January 2021

# இளஞ்சிவப்பு வண்ணத்தில் மாறிய தண்ணீர்



செந்தோசா கோவ் இடத்தைச் சுற்றியுள்ள கால்வாயில் தண்ணீர் இளஞ்சிவப்பு வண்ணத்தில் காணப்பட்டது.

மீன்கள் இறந்துபோனது அதற்குக் காரணமாக இருக்கலாம் என்று குடியிருப்பாளர்கள் நினைத்தனர்.

ஆனால் அவற்றைச் சுத்தம் செய்தும் தண்ணீரின் நிறம் இன்னும் இளஞ்சிவப்பில் இருப்பது பலரையும் வியப்பில் ஆழ்த்தி இருக்கிறது.

அதனால் அங்கிருப்பவர்கள் நீர் நடவடிக்கைகளைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கிறார்கள்.

மீன்கள் மடிந்ததற்கும் தண்ணீரின் நிறம் மாறியதற்கும் காரணம் என்ன என்று இன்னும் தெரியவில்லை என்று தேசியச் சுற்றுப்புற அமைப்பு 'டுடே' நாளிதழிடம் தெரிவித்தது.

தொழிற்சாலைக் கழிவுகள், கடல் தூய்மைக் கேடு ஏற்பட்டதற்கான அறிகுறிகள் ஏதுமில்லை என்றும் மற்ற கடலோரப் பகுதிகளில் மீன்கள் மடிந்ததாகப் புகார்கள் இல்லை என்றும் கூறப்பட்டது.

அடுத்த சில நாட்களில் வழக்கநிலை திரும்பும் என்று செந்தோசா கோவ் உல்லாசத்தல நிர்வாகம் அதன் குடியிருப்பாளர்களிடம் தெரிவித்து இருக்கிறது.

அதுகுறித்து, தேசியச் சுற்றுப்புற அமைப்பும் செந்தோசா கோவ் உல்லாசத்தல நிர்வாகமும் விசாரணை நடத்தி வருகின்றன.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.